மலையாள தேசத்தில் சிலவருஷகாலமாய் சென்ற் ஆனிஸ் மதுவிலக்குச் சங்கம் சிறந்த ஊழியம் புரிந்து வருகிறது. இச்சங்கத்தின் நல்லூழியத்தால் விளைந்த பலனைக்கண்டு, கிறிஸ்தவ குருமாரும் விசேஷ சிரத்தை யெடுத்துக் கிறிஸ்தவஜன சமூகத்துள் மதுவிலக்கு விஷயமா யிப்போதுழைத்து வருகிறார்கள். 1909௵ டிசம்பர் மாசத்தில் கொச்சி பிஷப் தமது விசாரணைக்குட்பட்ட சபைகளுக்கு ஒருசுற்றுக் கடிதம் எழுதி விடுத்தார். அதில் சென்ற் ஆனிஸ் மதுவிலக்குச் சங்கத்தின் முயற்சியைக் கர்த்தர் ஆசீர்வதிக்க வேண்டுமெனக் கோரியிருந்ததோடு, கிறிஸ்தவர்களெல்லாரும் தங்கள் மரங்களைக் கள்ளிறக்கும்படி குத்தகைக்கு விடவாவது சாராயக் கடைகளுக்குச் சொந்தக்காரராயிருக்கவாவது கூடாதென்று வெகு கண்டிப்பாய் எழுதியிருந்தார். இந்தக்கடிதம் கிறிஸ்தவர்களுக்குள் நல்ல மாறுதலை யுண்டாக்கினதாகத் தெரிகிறது. பிஷப்பினுடைய கடிதமாத்திரமல்ல, குருமாரெல்லாருமே இது விஷயமாய் முற்பட்டு அக்கரையா யுழைத்தபடியினாலே இப்போது மலையாளம் கிறிஸ்தவர்களுள் வெகு சொற்பமான பேரைத்தவிர மற்றவர்களெல்லாரும், மதுபானந் தீண்டாதவர்களும், மதுபானமிறக்கும்படி தங்கள் தென்னந்தோப்புகளைக் குத்தகைக்கு விடாதவர்களும், கள் சாராயக்கடைகளுக்குச் சொந்தக்காரராகாதவர்களுமாயிருக்கிறார்களெனக் கேள்விப்படுகிறோம். இதைப்பற்றி கொச்சி சாடி வைக்கர் ரெவரெண்ட் பாதர் A. J. ஹொரடியா "பாமிலி மாகஸீன்" என்கிற பத்திரிகையிலெழுதுகிறதாவது:—"நான் முந்திஎழுதித் தெரிவித்தபடி தற்கால மதுநிவர்த்தி முயற்சியினால் கொச்சி சர்க்காரைச் சேர்ந்த இப்பக்கங்களில் கள் குத்தகை யெடுத்தவன் நஷ்டப்பட்டுக் கடன்காரனாகிவிட்டான். ஆகவே சென்ற ஜூலையில் குத்தகையெடுப்பதை விட்டுவிட்டான். ஆனால் இப்போது இரண்டு மூன்று மாதங்களாய் அந்தக்குத்தகையை மிகவும் குறைந்த தொகைக்கு 4 ஆசாமிக ளெடுத்திருக்கிறார்கள். அவர்கள் இந்த சுதேச கொச்சி தாலுக்காக்களைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய தூண்டுதலால் இப்போது தென்ன மரங்கள் கள்ளுக்காக ஏராளமாய் முத்திரிக்கப் படுகின்றன. சும்மா விடப்பட்டிருந்த மரங்களெல்லாம் கள் வடிக்கத் தயாரிக்கப்படுகின்றன. சாத்தி விடப்பட்ட சாராயக் கடைகள் பல திறக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் நமது சத்துராதிகளுக்கு விரோதமாக நாம் செய்ய வேண்டிய யுத்தம் வெகு யூகமாகவும் வைராக்கியமாகவும் நடத்தப்படவேண்டிய

தாயிருக்கிறது. காரியம் இப்படி யிருந்த போதிலும் கள்ளுக்கு மரங்கள் கட்டப்படு தலும், புதிய சாராயக்கடைகள் திறக்கப்படு தலும் இந்துக்களால் மாத்திரமே நடக் கிறதென்று கூறச் சந்தோஷிக்கிறேன். கிறிஸ்தவர்களுக்குள்ளும் சில அயோக்கிய ரிருப்பது விசனமான காரியமா யிருந்த போதிலும், பெரும்பாலும் இந்துக்களே தங்கள் தோப்புகளைக் கள்ளிறக்க விட்டிரு கிறார்கள். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் மதுவிலக்கு முயற்சியை ஆதரிக்கிறார்கள். டவுணிலும், இன்னும் சில தூர இடங்களி லுமுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் தென்னந் தோப்புகளைக் கள்ளுக்கு விட்டிருக்கிறார்க ள். மற்றப்படி அநேகர் அவ்விதம் செய்வதை நிறுத்தி விட்டார்கள்''. என்றிவ்வித மெழு துகிறார். மேலும் சென்ற் ஜான்ஸ் பட்ட ணத்தில் உள்ளவர்களெல்லோரும் குடியை விட்டு விட்டதால் அங்குள்ள 3 கள்ளுக் கடைகளையும் எடுத்துவிட வேண்டுமென கலெக்டருக்கு எழுதிக்கொண்டிருப்பதா கவும், அவைகளில் ஒன்று ஏற்கனவே எடு பட்டுப் போனதாகவும், இன்னொன்று கூடி ய சீக்கிரம் நீக்கப்பட்டுப் போமென்றும் தெரிவிக்கிறார்.

இதை நாம் கவனிக்கையில் மலையா ளத்தில் மதுவில்க்குச் சங்க மாத்திரமல்ல, குருமாரும் அவர்களோடு சேர்ந்துழைப்பதி னாலே இரண்டு வருஷகாலத்துள் ஆச்சரி யமான மாறுதலுண்டாயிருக்கிறது. அவ் விடத்துக் குருமார் மதுவிலக்கு முயற்சியை ஆதரித்துப் பேசுவது மாத்திரமன்று;தாமே முற்பட்டு சிரத்தை வகித்துழைக்கிறார்கள். சபைக்குத் தலைவராகிய பிஷப்முதல் சகல போதகர்மாரும் விசேஷித்த அக்கரை யெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகை யால் அவ்விடத்தில் மேற்சொன்ன மாறுத லுண்டாயிருப்பது ஆச்சரியமன்று. கிறிஸ் தவன் கட் சாராயம் குடிப்பதும், தன்னு டைய தென்னந் தோப்பைக் கள்ளிறக்க விடுவதும், சாராயக் கள்ளுக்கடைக்குச் சொந்தக்காரனயிருப்பதும் எவ்வளவு அவ லக்ஷணம்! இந்து மார்க்கமும் மகமது மார்க்கமும் சாராயம் குடிப்பது மட்டுமல்ல, சாராயம் கள்விற்பதையும், அதனல் வரும் ஆதாயத்தால் பிழைப்பதையும் பாவமெனக் கண்டிக்கிறது. அப்படியானல் மார்க்க விரோதமாயிருக்கும் கிறிஸ்து மார்க்கம், சாராயங் கள்ளைக் குடிப்பதும் பனந்தென் னந்தோப்புகளைக் குத்தகைக்கு விடுவதும், சீமை சாராயங்களைக் கேஸ் கேஸாய்க் கொண்டு வந்து ஷாப்பில் வைத்து விற்ப தும் பாவமல்ல என்று சொல்லுமா? கானு வூரில் இயேசுநாதர் தாமே திராக்ஷரசம் செய்து கொடுத்தார்; ஆகையால் புட்டி புட்டியாய்ச் சாராயங் குடிப்பது மார்க்க விரோதமல்ல; வேத சம்மதந்தான் என்று போக்குச் சொல்லுகிறவர்கள் எவ்வளவு பயங்கரமான தேவ தூஷணைக்காரர்? இதையெல்லாம் வைதீகக்காரியத் தலைவர் களாயிருக்கிறவர்கள் எடுத்துக் காட்டினல் தான் ஜனங்களுக்குத் தெரியும். அவர்கள் முயலுகிற விஷயத்தில் கிறிஸ்தவர்களுள் நடமாடும் அவலக்ஷணமான குடி நிலைத் திருக்குமா? குருமாருக்குள்ளும் பலர் முழு பூசினிக் காயை சோற்றோடே மறைக்கிற வர்களாயிருக்கிறபடியினலேதான் சாராயக் குடியென்கிற பயங்கர பிசாசு கிறிஸ்தவ சபைகளை விட்டு நீங்காமலிருக்கிறது. இப்படிப் பட்டவர்கள் மலையாளக் கிறிஸ் தவ குருமாரின் மாதிரியை யாகிலும் பின்பற்றி நடந்தால் எவ்வளவு ஆசீர்வாதமா யிருக்கும்? எல்லா சபை குருமாரும் அந்தச் சிறந்த அடியார்களைப் பின்பற்றிக் கிறிஸ்தவ ஜன சமூகத்தின் வாழ்வைக் குலைக்கும் குடி யென்னும் பிசாசைத் தலைக்காட்டா தடிக்க முயலுவார்களென்று நம்புகிறோம்.

## The New Viceroy.

## புதிய இராஜப் பிரதிநிதி

நாளது வருஷம் நவம்பர் மாதத்தோடு நமது இராஜப் பிரதிநிதி லார்ட் மின்டோ வின் ஆட்சிகாலம் முடிந்து, அவர் சீமைக்கு திரும்பி விடுவார். ஆகையால் அவருடைய ஸ்தானத்தில் சர் சார்லஸ் ஹார்டிஞ் இந் திய இராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட் டிருக்கிறாரென்று சமாசாரம் வந்திருக் கிறது. சில மாதங்களுக்கு முன்னிருந்து இந்திய இராஜப்பிரதிநிதி ஸ்தானத்துக்கு வரப்போகிறவர் யார் என்பதைக் குறித்துப் பல உத்தேசங்களிருந்தன. சிலர் லார்ட் கிச்சனர் நியமிக்கப் படலா மென்றார்கள். இன்னுஞ் சிலர் நமது இராஜ குடும்பத்தைச் சேர்ந்த கன்னட் பிரபு நியமிக்கபடலா மென்றார்கள். இன்னும் பற்பல நாமங்கள் கூறப்பட்டன. அவர்களில் சர் சார்லஸ் ஹார்டிஞ் முடிவாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த நியமனம் வெகு திருப்திகாமான தென்று எல்லாராலும் கருதப்படுகிறது. இந்தியா மந்திரியம் மற்றும் பிரிட்டிஷ் இராஜாங்கப் பொறுப்பேற பெற்றவர்களும் மகா விவேகத்தோடும் ஆழ்ந்த யோசனையோடும் சர் சார்லஸ் ஹார்டிஞ்சை வைசிராயாகத்தெரிந்து நியமித்திருக்கிறார்களென்று எல்லாராலும் பூஷிக்கப்படுகிறார்கள். ஏனெனில் சர் சார்லஸ் ஹார்டிஞ் இந்தியாவின் இராஜ்ஜியபாரத்தையேற்று நிர்வகிக்க எவ்வள வேணும் திறமை குறைந்தவரல்லவென்று கூறப்படுகிறது. அன்றியும் இவர் பார்லிமென்டு கக்ஷிகளில் ஒன்றையும் சேர்ந்தவரன்று. ஒருகக்ஷிக்குரியவரானல் மற்றொரு கக்ஷியார் குறை கூறுவார்கள். இவ்வித கக்ஷிபேதங்களுக் குட்படாமல் பிரிட்டிஷ் அயல் நாட்டு உத்தியோக சாலையில் காரிய தரிசியாயமர்ந்திருந்தவர். இவருடைய நியமனத்தினல் பிரிடிஷ் பாரின் ஆபீஸுக்கு நஷ்டமேயாயினும் பார்லிமென்டு கக்ஷியாருக்குள் பலஹீனமில்லே. தவிர இவர் லார்ட்மின்டோவை யொப்ப இந்தியாவை சம்பந்தப்பட்டவர். எவ்வாறெனில் 1844 முதல் 1848 வரையில் இந்தியாவின் கவர்னர்ஜெனரலா யிருந்த வைகவுண்ட் ஹார்டிஞ் இவருடைய பாட்டனுர். சர் ஹென்றி ஹார்டிஞ் என்கிற பேர் கொண்ட அவர் 13 வயதில் இராணுவத்தில் சேர்ந்து அநேக யுத்தங்களில் வீரப்பிரதாபம் பெற்று இந்தியாவுக்கு கவர்னர் ஜெனரலாய் வந்து அவர் காலத்தில் நிகழ்ந்த சீக்கிய யுத்தத்தின் ஆரம்பத்தில் இராணுவங்களைத் தாமேநடத்தி சண்டை செய்தார். பிறகு இங்கிலண்டு சென்று, வெலிங்டன் டியூக்குக்குப் பிறகு கமாண்டரின் சீப் வேலைப் பார்த்து 1856-ல் மரண மடைந்தார். அவர் இந்தியாவிலிருக்கையில் அவருடைய குமாரனே அவருடைய அந்தரங்க காரியதரிசியாயுமிருந்தார். அவருடைய வயிற்றில் பிறந்த சர் சார்லஸ் ஹார்டிஞ் இப்போது இந்தியாவின் இராஜப்பிரதிநிதியானுர். இந்த விதமாய் லார்ட் மின்டோவை விட இவர் இந்தியாவை நெருங்கிச் சம்பந்தப்பட்டவர் என்ன வேண்டும். இவர் 1858-ம் வருஷம் பிறந்தார். இங்கிலாந்தில் கீர்த்திபெற்ற கலாசாலைகளில் படித்துத் தேறி 1880-ல் அரசாங்க உத்தியோகமமர்ந்தார். 1881ஹு முதல் 1903ஹு வரையில் பல அந்நிய நாடுகளில் பிரிடிஷ் ஸ்தானுபதியாக உத்தியோகம் பார்த்தார். 1903-ல் பாரின் ஆபீஸில் மந்திரி பதவிக்குயர்த்தப் பட்டார். 1904-ல் ருஷியாவுக்கு அதிகாரம் பெற்ற ஸ்தானுபதியாகப்போனுர். அந்தச் சமயத்தில் ருஷிய ஜப்பானிய யுத்தம் நேரிட, பிரிடிஷாருக்கும் ருஷியருக்கும் நேரிட விருந்த பலத்த பந்தத் தளர்ச்சியை யூகமாய்ப் பிகிந்து முடி போட்டு வைத்தார். இவர் ருஷியாவிலிருக்கையில் எந்த விஷயத்திலும் பிரிடிஷார் ஆதிக்கத்தைத் தளரவிடாமல் கிரேட் பிரிட்டனின் பின்வாங்காத தன்மையைத் தம்முடைய வீரத்தாலும் தீரத்தாலும் நிலை நிறுத்தி வைத்தது சரித்திரத்தில் வெகு முக்கியமான விஷயம். பிறகு இங்கிலண்டுக்குத் திரும்பி பாரின் ஆபீஸ் பெர்மனன்ட் அண்டர் செகரிடெரியாயிருக்கையில், 1906ஹு முதல் 1909 வரையில் காலஞ் சென்ற சமாதானப் பிரிய மகாராஜா எட்வர்ட் சக்கிரவர்த்தியின் அயல் நாட்டுப் பிரயாணங்களில் அவருடைய அரியத்துணைவனுய்ப் போய்க் கொண்டிருந்தார். இந்தப் பிரயாணங்களெல்லாம் இவருடைய இராஜ்ஜிய விவகார அறிவை மேலும் மேலும் அதிகரிக்கக்கூடியதா யிருந்தன. இவருக்கு இந்தியாவின் அறிவுபோதுமானமட்டும் இருக்க நியாயமில்லையாயினும் கீழ் தேசங்களில் வசித்தும் பிரயாணம் பண்ணியும் கீழ்தேசத்தார் மனப்பாங்கு நடவடிக்கைகளை நன்குணர்ந்திருக்கிறார் என்னத் தடையில்லே. இவருடைய இராஜ்ஜியபாரம் என்னவிதமாயிருக்குமென்று நாமிப்போது சொல்ல முடியாது. என்றாலும் விசேஷித்த அறிவும் அனுபவமுமுடைய இவர் தமது பொறுப்பைத்திறமையாய் நிர்வகிப்பாரென்று சகலராலும் நம்பப்படுகிறது. இந்தியாவுக்கு வருமுந்தி லார்ட் பட்டம் பெற்று வருவார்.

---

## Alcohol and Consumption.

## மதுபானமும் க்ஷய ரோகமும்.

சில காலத்துக்குமுன்னர் நியூகாவிலிலுள்ள டாக்டர் அல்லிஸன் என்கிற ஆயுள்வேத பண்டிதர், உலகத்திலுள்ள சகல ஜாதியாருள்ளும் யூதர்களே க்ஷயரோகம் அண்டாதவர்களென்றும், அவர்கள் மது பானத்தை நீக்கி நல்ல ஆகாராதிகளை யுட்கொள்ளுவதே அதற்குக் காரணமென்றும் வெளியிட்டார். இது உண்மையோ அல்லவோ என்று கண்டறியும் பொருட்டு "மாஞ்செஸ்டர் ஈவினிங் கிரானிகல்" பத்திரிகையின் பிரதிநிதி யொ

ருவர் மாஞ்செஸ்டரில் க்ஷயரோகிகளுக்கென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற வைத்தியசாலைக்குச் சென்று, அவ்விடத்து வைத்தியசாலைத் தலைவரொருவரிடம் விசாரணை செய்து அத்தலைவர் சொன்னதைப் பிற்கூறியபடி வெளியிடுகிறார்:—ஒரே தரமான ஜனங்களுள் கிறிஸ்தவர்களை க்ஷய ரோகத்தால் மிகுதியும் வருந்துகிறார்கள். யூதர்களை அரிதாய் அந்நோய்ப் பிடிக்கிறது. இந்த ஆஸ்பத்திரி ரெக்கார்டுகள் அதற்கு சாக்ஷி பகரும். இந்த வித்தியாசத்துக்கு முகாந்தரம் ஆகாரமேயானபோதிலும் மதுபானமே முதன்மையானதென்று எனக்குத் தோன்றுகிறது யூதர்கள் சகஜமாய் மதுபானத்தைத் தொடுகிறதேயில்லை. வேலையற்ற சமயத்தில் இங்கிலீஷ் காரனை நாம் சாராயக்கடைகளில் காண்கிறதுபோல அந்த ஜாதியாருள் ஒருவனையாகிலும் நாம் காண முடியாது. க்ஷயத்துக்கு முதல் காரணம் மதுபானம்; இரண்டாவது ஆகாரமின்மை. யூதர்கள் தங்கள் போஜனத்தை சமைக்கிற வகையில் விசேஷமிருக்கிறது. அவர்கள் கொழுப்பை அதிகமாய் சேர்க்கிறார்கள். முக்கியமாய் மீனைக் கொழுப்பில் வறுப்பார்கள். அந்த ஜாதியாரையும் இங்கிலீஷ்காரரையும் ஒத்திட்டுப் பார்த்தால் அவர்களே இங்கிலீஷ் ஜனங்களை விட சுசியுள்ளவர்கள். சுசியென்னும்போது உடம்புத்தோலை சுத்தமாய்வைப்பதைப்பற்றி நான் சொல்லவில்லை. தங்கள் ஜீவியமே சுத்தமாயிருக்க அவர்கள் முயலுகிறார்கள். நான் யூதனல்ல; நான் அவர்களை நேசிக்கிறவனுமல்ல; என்றாலும் அவர்களுக்குரிய புகழ்சியை நான் செலுத்த வேண்டும். அவர்கள் கிறிஸ்தவர்களை விட வெகு சொற்பமாய்த் தங்களுடைய இன்பங்களுக்காக செலவழிக்கிறார்கள்; தங்கள் பிள்ளைகளுக்காக மிகுதியாய்ச் செலவிடுகிறார்கள். அவர்கள் இங்கிலீஷ் காரரைப் பார்க்கிலும் நல்ல வீடுகளில் வசிக்கிறார்களென்று டாக்டர் நிவின் சொன்னதை நான் பூரணமாய் ஒப்புகிறேன். அதிக ஏழையான யூதர்கள் தங்கள் நிலைமையிலுள்ள இங்கிலீஷ்ஜனங்களை விட வீட்டைப் பற்றிய வாஞ்சை யுள்ளவர்கள். யூதர்களுக்குள்ளே குழந்தைகளுக்கு க்ஷயரோகம் பிடிக்கிறதேயில்லை. க்ஷயரோகத்துக்கு கொழுப்புள்ள ஆகாரம் அவசியமானதால் அப்படிப்பட்ட ஆகாரமே அவர்கள் அதிகமாயுட்கொள்ளுகிறார்கள். என்றிவ்வாறுரைத்து மதுபானத்தை அதிகமாய்க் கண்டித்துப்பேசினரென்று அப்பிரதிநிதி தெரிவிக்கிறார்.

## Temperance Notes.

## மதுவிலக்குக் குறிப்புகள்.

Temperance in the Army:—இங்கிலாந்தில் இராணுவ வீரருள்ளும் அநேகர் மதுபானத்தை விட்டொழித்து வருகிறார்கள். யுத்த ஆபீசைச் சேர்ந்த காப்டன் ஜோன்ஸ் சமீப காலத்தில் அது விஷயமாகப்பேசினபொழுது, டிட்வொர்த் பாரக்ஸில் மூன்று ரெஜிமென்டுகள் மதுபானமே அருந்துகிறதில்லையென்று வெளியிட்டார்.

Whisky Drinking and Fatigue:—சிக்காகோ வைத்திய சங்கத்தார் சமீபத்திலே நடத்தின சோதனையில் கண்டுபிடித்ததாவது, ஒருநாளில் ஒருவன் அருந்தும் 6 கிளாஸ் விஸ்கி பலமும் சுறுசுறுப்புமுள்ள ஒருமனிதனின் முழுநாள் வேலையைக் கெடுக்க கூடியது என்பது. விஸ்கி சாப்பிட்ட மறுநாள் அவனுடைய நரம்புகளும் தசைநாரும் ஒருநாள் கஷ்ட வேலையால் எவ்வளவு தளர்ச்சியும் சோர்வும் அடைந்திருக்கக் கூடுமோ அவ்வளவு அடைந்திருந்ததாம்.

Canadian Premier and Compensation:—கியுபெக்கின் பல பாகங்களிலுமுள்ள சாராய வர்த்தகரெல்லாரும், சாராய வியாபார சட்டத்தில் பின்னும் மாறுதல்கள் செய்யக்கூடாதென்றும், தகுமான நஷ்டஈடு செலுத்தாமல் அரசாங்கத்தார் லைசென்சு கொடுப்பதை நிறுத்தக்கூடாதென்றும் கன்னடாவின் பிரதம மந்திரிக்கு மனுகொடுத்தார்கள். அப்போது அவர்களுக்களித்த விடையில் பிரதம மந்திரி சர் லோமர் கௌவின் தெரிவித்தது, மதுபான மருந்துதல் தேசத்திலே பல அநர்த்தங்களை விளைத்தமையால் அதைக்குறைப்பதிலுண்டாகிய நஷ்டத்துக்காக நல்ல தேசாபிமானிகள் சந்தோஷமடைவதே நியாயம் என்பதே.

Temperance in Canada:—மான்ட் ரீவில் நிகழ்ந்த டொமினியன் அலையன்ஸ் மதுவிலக்குச் சங்கத்தில் அறிவிக்கப் பட்ட பிரகாரம் கன்னடா முழுவதும் மதுவிலக்கு அலை பரவிவருகிறது. அநேக ஜில்லாக்களில் சாராயக் கடைகள் எடுத்து விடப்பட்டன.. ஒவ்வொரு மாகாணத்திலும் லைசென்ஸ்தொகை குறைக்கப் பட்டிருக்கின்றன.

மது விலக்குச் சங்கத்தின் அரிய முயற்சியினாலேயே இப்படியாகிறதென்றறிந்து, சாராய வர்த்தகர்கள் பலமாய் அச்சங்கத்தைக் கண்டனம் பண்ணி, அவர்கள் கானாவின் அற்புதத்தை அற்பமாக்கவும் மாற்றவும் நினைக்கிற மாய்மாலக்காரரென்றும், இன்னும் மேசைமேலிருக்கிற உவொயினைத் தண்ணீராக்க முயலுகிற மூட சிகாமணிகளென்றும் தூஷிக்கிறார்கள். கானாவில் நமது ஆண்டவர் தண்ணீரைத் திராக்ஷரசமாக்கினதே சகல சாராயங்களையும் அவருடைய அடியார்கள் குடிக்கலாமென்று அவர் கொடுத்திருக்கிற சன்னது என நினைத்து மனப்பால் குடிக்கும் கிறிஸ்தவர்களின் மதியீனத்தை யென்னென்று சொல்லலாம்.

Temperance Teaching in Scottish School:—ஸ்காட்லாந்து பள்ளிகூடங்களில் பல வருஷகாலமாய் மதுவிலக்குப் பாடங்கள் சொல்லி வைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இப்போது இங்கிலாந்து கல்வியிலாகாதார் பிறப்பித்திருக்கிற பாட விஷயங்களை அவ்விடத்துக் கல்வியிலாகாதாரரும் அனுசரித்துக் கொண்டிருப்பதுடன் இதுகாறும் நடத்தப்பட்டதைப்பார்க்கிலும் அதிகக் கிரமமாய் மதுவிலக்குப் பாடங்கள் நடத்தப்படவேண்டுமென் றேற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

A Veteran Teetotal Walker:—இங்கிலாந்தில் மதுவிலக்கு விஷயமாய் பல அரிய பிரசங்கங்கள் செய்துவந்த மிஷ்டர் E.P வெஸ்டன் என்கிற பெரியவர், லாஸ் ஆஞ்சிலாஸிலிருந்து அட்லாண்டிக் வரையில் அமெரிக்க ஐக்கிய மகாணத்தை 102 தினங்களில் ஊடுறவக் கடந்து நடந்து போவதாய்ச் சபதம் செய்து கொண்டு 82 நாட்களில் 3500 மைல் பிரயாணம் செய்து முடித்திருக்கிறார். இவருக்கு இப்போது வயது 72. இதற்குமுன் இரண்டு முறை அமெரிக்காவைக் கடந்து நடந்திருக்கிறார். இவர் சிறிதும் மதுபானந் தொடாதவர்.

The Late King and Beery Fables:—காலஞ் சென்ற எட்வர்ட் மகாராஜாவின் சரித்திரத்தைப் பற்றி சமீபத்தில் பத்திரிகைகள் பிரசுரம் செய்தபோது 1871-ம் வருஷத்தில் அவர் பயங்கரமான வியாதிக்குட்பட்ட காலத்தில் பலநாள் பிரக்ஞையற்றிருந்து மூர்ச்சை தெளிந்தவுடன் ஒரு கிளாஸ் பீர் கொடுங்கள் என்று கேட்டதாக எழுதின. இது சுத்தப் பிசகென்றும், அப்படி யொருபோதும் நடக்கவே யில்லை யென்றும் ரெவரண்ட் மீட் எழுதுகிறார்.

King Edward as A Landlord:—எட்வர்ட் மகாராஜாவின் சரித்திரத்தை யெழுதின ஒருவர் சொல்லுவது "அவர் ஒரு மாதிரி நிலசுவான்தார், கைதேர்ந்த பண்ணைக்காரர், சுகாதார சீர்திருத்தக்காரர், தயாள சிந்தை யுள்ள பரோபகாரி, மதிப்புக்குரிய எசமான், மதுவிலக்குச் சீர்திருத்தக்காரருள் அனுபவமுறை யறிந்த தீரர். அவருடைய சொந்த சமஸ்தானத்தில் ஒரு சாராயக்கடையாகிலுங் கிடையாது. அதற்குப் பதிலாய் பையன்களுக்குக் கைத்தொழில் பள்ளிக்கூடங்களும் ரீடிங்ரூம் புத்தகசாலைகளும் வியாதிப்பட்ட ஏழை வேலைக்காரருக்கு ஆஸ்பத்திரியும், சமையல் வேலை கற்பதற்கு மாதிரி சமையற் புரையும், பலவீன நிலைமையிலுள்ள பெண்களுக்கு ஜீவனந்தரும் நூற்கும் யந்திரங்களும், வீட்டு வேலைகளும் தையல் வேலையும் பழகும் சாலையும் பலவுண்டு. 30 வருஷகாலமாய் எட்வர்ட் மகாராஜா பிரஜைகளின் இல்லற பரிபாலன முறையை விர்த்தி செய்வதில் மிகுந்த கவலையெடுத்துக் கொண்டிருந்தார்." இவ்வித உத்தம மேதாவியை இழந்து விட்டது நம் துர் அதிர்ஷ்டமே.

Sir Victor Horsly on National Drink:—மேமீ 9உ லிவர்பூல் பட்டணத்தில்கூடின வைத்தியர்கள் சபையில் சர் விக்டர் ஆர்ஸ்லி மதுவிலக்கைப்பற்றி உபந்நியாசஞ் செய்தார். அப்போது லார்ட் மேயர் அக்கிராசனம் வகித்திருந்தார். உபந்நியாசகர் தமது பிரசங்கத்தில் ஆங்கிலேயருக்குள் குடி நிரந்தர வழக்கமாக போனதையும், விருந்துகளிலெல்லாம் அது சகஜமாய்க் கையாடப்படுவதையும் கண்டித்துப் பேசினார். இந்த ராச்சியத்தில் அரசாண்ட முடிமன்னர்களில் எட்வர்ட் மகாராஜாவே குடிவழக்கத்தை நிக்கிரகம் பண்ண முயன்ற முதல் அரசர் என்றும், அவர் தமது சுகத்தைக் கோரி விருந்துகளில் குடிக்கும் பானத்தைத் தண்ணீராக மாற்றிக் கொள்ளலா மென்று வெளியிட்டிருக்கிறாரென்றும் சொன்னார். வைத்தியர்களெல்லாரும் உண்மையான தேசோபகாரிகளாயிருக்கவேண்டுமாயின் குடியை விடவேண்டுமென்றார். குடியானது தேசத்துக்கு நாசத்தை விளைக்கும் ஒரு கெட்ட பழக்கமேயன்றி வேறில்லை யென்றார். சாஸ்திர

விசாரணையால் கண்டறிந்திருக்கிறபடி மதுபானத்தின் ஒரு சிறிய அளவும், நோய்க் கென்று கொடுப்பதும் தீமையே செய்கிற தன்றி நன்மை செய்வதில்லை யென்றூர்.

**Drink obtainable even in Poverty:**—லண்டன் பட்டணத்தில் ஜஸ்டிஸ் மிஸ்டர் கிராந்தம் முன்னிலையில் 26 பிராய முடைய ஒரு போர்வீரன் குடியில் தன் மூன்று பிள்ளைகளையும் கொலை செய்து விட்டான் என்றுகுற்றஞ் சாட்டப்பட்டான். இவன் இராணுவத்தை விட்டு 18 மாதகாலம் வேலை யில்லாதிருந்து தகப்பன் வீட்டுக்குப் போக, அவன் இவனைத் திட்டினனும். அதன் மேல் தன் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்த தாகவும், பிறகு பிள்ளைகள் கழுத்தறுக்கப்பட்டு கிடந்ததாகவும் கூறப்படுகிறது. குற்றவாளியின் தகப்பன் ஜட்ஜ் முன்னிலையில், அவன் கொஞ்சம் சுயாதீன புத்தியோடு இருந்ததாகச் சொன்னன். ஜட்ஜ் அவனைப் பார்த்து "மனிதர் வேலையற்றிருக்கும் போது சாராயம் குடிக்கிறூர்களே அது ஆச்சரியமல்லவா"? என்றூர். "ஆம் ஐயா ஜனங்கள் சோறு போடாவிட்டாலும் சாராயம் தாராளமாய் வாங்கிக் கொடுக்கிறூர்கள்" என்று அவன் சொன்னன். அப்போது ஜட்ஜ் "அதுதான் பெரிய சாபம்" என்றூர்.

**Mahomet Prohibition of Wine:**—மகமது குருனிலே மதுவருந்தக் கூடாதென்று கட்டளை யிட்டிருப்பதற்குக் காரணம் பிற்கூறிய விதமாய் சொல்லப்படுகிறது. அவர் ஒருநாள் ஒரு கிராமத்தின் வழியாய்ப் போகையில் ஒரு கலியாண வீட்டில் மெத்த கேளிக்கையாயிருக்கக் கண்டாராம். மறு நாள் அவ்வழியே திரும்பி வருகையில் அந்த வீடு இரத்தம் நிறைந்து இரணக்களமாயிருந்ததாம். இது குடியின் பயனென்றறிந்து குடியை விசுவாசிகள் தொடக்கூடாதென்றும், தொட்டால் பரதீசில் இடமில்லை யென்றும் எழுதி வைத்தாராம்.

## General News and Notes.

## பொது வர்த்தமான குறிப்புகள்.

**The Study of Education:**—ருஷியாவிலிருந்து 200 உபாத்திமாரும் மானிடோபாவிலிருந்து 150 உபாத்திமாரும் தற்கால போதக சிறை கற்றறிந்து வரும் பொருட்டு கிரேட் பிரிட்டனுக்குப் போக உத்தேசித்திருக்கிறூர்கள்.

**Railway Disaster in Mexico:**—மன்சனில்லா என்னுமிடத்தில் நான்கு ரதம் பூட்டிய ஒரு புகை வண்டித் தொடர் செங்குத்தான மலைப்பாதையில் போகையில் தவறிவிழுந்துப் பொடிப்பட்டு போனதென்றும் 37 பிரயாணிகள் மாண்டு 50 பேர் படுகாயப் பட்டார்களென்றும் மெக்ஸிகோ தந்தி யறிவிக்கிறது.

**South Polar Expidition:**—ஜூன் மாசம் 25௳ பக்கிங்காம் அரமனையில் அலக்ஸாந்திரா மகாராணி, தென் துருவத்தைக் கண்டு வரப் பிரயாணப்பட்டுப் போகும் காப்டன் ஸ்காட்டை வரவேற்று, அவர் கண்டு பிடிக்கும் தென் அந்தத்தில் நாட்டி விட்டு வரும் பொருட்டு ஒரு கொடியை வெகுமதி செய்தார்கள்.

**Lectures on Social Reform:**—மிஸ்டர் மங்களதாஸ் கார்சன்தாஸ் மூல்ஜி என்ற பம்பாய் கனவான் ஒருவர், ஆசார சீர்திருத்த விஷயமாய் பம்பாய் இராஜதானி சீர்திருத்தச்சபையின் பிரதி வருஷாந்தர கூட்டத்திலும் சாதுரியமாய் உபந்நியாசஞ் செய்யும் இந்து ஸ்திரிக்கு ரூ.50 வெகுமதி தரப்படும்படி ஏற்பாடுசெய்திருக்கிறூர்.

**The Viceroys of India and Canada:**—சர் சார்லஸ் ஹார்டிஞ் இந்தியாவின் இராஜப் பிரதிநிதியாகவும், டியூக் ஆவ் கன்னட் கன்னடாவின் இராஜப் பிரதிநிதியாகவும் நியமிக்கப் பட்டிருக்கிறூர்கள். இந் நியமனங்கள் காலஞ் சென்ற எட்வர்ட் மகாராஜாவின் விருப்பப்பிரகாரம் செய்யப்பட்டனவென்று "டேய்லி கிரானிகல்" பத்திரிகை கூறுகிறது.

**The Sufferagette Campaign:**—லண்டனில் பெண் சுதந்தர வாதிகள் மறுபடியும் தங்கள் வாதாட்டத்தை யாரம்பித்து ஜூன் மீ 19௳ 10,000 பேர் கூடி ஒரு பெரிய பவனிபோனூர்கள். இதன் நீளம் 2 மைலிருந்தது. இதைநடத்தின ஸ்திரிகள் பச்சை உடைதரித்துக் குதிரைகளின் மேல் ஏறிச் சென்றூர்கள். ஆல்பர்ட் ஹாலில் சென்று

தங்கள் சுதந்தரத்தை ஸ்தாபித்து உபந்நியாசங்கள் செய்தார்கள்.

A Doctor's Crime:—சென்ற் பீற்றர்ஸ் புரியில் டாக்டர் பாச்சென்கோ என்கிற ஒரு வைத்தியன் கவுண்ட் பாண்டர்லின் என்கிற பிரபுவை விஷமூட்டிக் கொன்று கைது செய்யப்பட்டிருக்கிருன். கொலையுண்ட பிரபுவின் மைத்துனனும், அவன் சொத்துக்கு வாரீசு தாரனுமாகிய கவுண்ட் லியாசி ஏவுதலால் தான் ஷை பிரபுவின் உடம்பில் விஷமேற்றினதாக வைத்தியன் ஒப்புக்கொண்டிருக்கிருன்.

Unprecedented Rain in Bombay:—ஜூன் ௴ 22வ இரவு பம்பாயில் வடமேற்கு மழை தன் மும்முரத்தைக் காட்டி விட்டது. இதற்குமுன் ஒருநாளும் பெய்யா வண்ணம் சில மணி நேரத்துக்குள் 13 அங்குலம் மழை பெய்தது. பல மணிநேரம் மழை விடாமலடித்ததாகச் சொல்லப்படுகிறது. டாணு பந்தரில் அரிசி கிடங்குகளில் வெள்ளம் வந்து ரூ. 15000 பெறுமான அரிசி நஷ்டமாய் விட்டதாம். ஜனங்களும் கஷ்டமனுபவித்ததாக தெரிகிறது.

A Girl Murderess:—மேற்கு சைபீரியாவில் காக்காரவா என்னுமிடத்திலிருந்து இந்த சமாசாரம் எட்டுகிறது: 17 வயதுள்ள ஒருபெண் தன் மாமன் தன்னைத் திட்டினதைச் சகியாமல், கத்தியெடுத்து 12 வயதுள்ள தன் தம்பியைக் கொலைசெய்து, பிறகு தன் தாயாரின் கைகளைத் துணித்து முதுகெலும்பை யொடித்து, தன் மாமனையும் வெட்டி வீழ்த்தி, அத்தையையும் மொத்தினள். அத்தை சாகுமுன் போலீஸார் வந்து பிடித்துவிட்டார்கள். இவளென்ன நீலியோ!

The Peace of the World:—உலக முழுமையிலும்சமாதானம்நீடிப்பதைப்பற்றி பலதேசத்து இராஜாங்கங்களோடெல்லாம் கலந்து பேச, வல்லவர்களான ஐந்து அமெரிக்க கனவான்களை ஒரு கமிஷனாகத் தெரிந்து நியமிக்க வேண்டுமென்று அமெரிக்க பார்லிமென்டு சபை தங்கள் பிரஜாதிபதி அரசரைக் கேட்டுக்கொண்டிருக்கிறதென்று வாஷிங்டனிலிருந்து தந்தி வந்திருக்கிறது. இந்தக் கமிஷனுக்கு மாஜி பிரஜாதிபதி மிஸ்டர் ரூஸ்வெல்ட் தலைமை வகிப்பாரெனக் கருதப்படுகிறது.

Conversion of a Hindu Gentleman:—வட இந்தியாவில் பெரோஜ்பூரில் கண்ணியம் பெற்ற இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த மிஸ்டர் ஹார்னும்தாஸ் என்கிற பாரிஸ்டர் சில நாட்களுக்கு முன் கிறிஸ்து மார்க்கத்தை யேற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார். அவருடைய தகப்பனார் பெஷாவாரில் பப்ளிக் பிராஸிகியூட்டராயிருக்கிறார். பாட்டனார் பென்ஷன் வாங்கிக் கொண்ட டிஸ்டிரிக்ட் ஜட்ஜ். இவரது மார்க்கப் பிரவேசம் கொஞ்சம் குழப்பமுண்டாக்கியிருக்கிறதென் றறிகிறோம்.

A Suffragette Fined:—லண்டன் பட்டணத்தில் ஸ்திரி சுதந்தரவாதிகள் தங்கள் போராட்டத்தில் பிடிவாதமாகவே யிருந்து வருகிறார்கள். சமயாசமயம் அவர்களால் மூர்க்கத் தனமும், சட்ட விரோதமான செய்கையும் நிகழுகிறது. சமீபத்தில் ஒருத்தி லார்ட்ஸ் கிரவுன் ஆபீஸ் ஜன்னலைக் கல்லாலெறிந்து உடைத்துப் போட்டாளெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 5 பவுன் அபராதம் விதிக்கப்பட்டாள். ஜட்ஜ் முன்னிலையில் மற்றவர்கள் ஏவுதலில் செய்ய வில்லையென்றும் தானே செய்ததென்றும் தைரியமாய்ச் சொன்னள்.

Stray Moslem Girls in Bombay:—பம்பாய் போலீஸ் கமிஷனர் மிஸ்டர் எட்வர்ட்ஸ் பம்பாயிலுள்ள மகமதிய வகுப்பாருக்கு ஒரு விண்ணப்ப மனுப்பி யிருக்கிறார். அதில் அநாதரவாய்த் திரிகிற மகமதிய பெண்களுக்கு ஒரு அநாத சாலை கட்ட பொருள் சகாயம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இதுவரையில் ரூபா 60000 சேர்ந்திருக்கிறது. இன்னும் ரூபா 300 வாக்களிக்கப் பட்டிருக்கிறது. மாசத்தில் 12 பெண்களுக்கு ரூ. 456 செலவாகுமாம். அதிகப்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் ரூ. 10 பிடிக்குமாம். மொத்தம் ரூ. 150000 வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. இந்நற் முயற்சிக்கு அநேகர் உதாரத்துவமாய்ப் பொருள் சகாயஞ் செய்வார்களென நம்புகிறோம்.

**Conquest of the Air:**—ஜெர்மனியில் ஆகாயக் கப்பல்களில் பிரயாணிகளை யேற்றிக்கொண்டுபோக ஆரம்பம் செய்ததையறிந்து ஜனங்கள் அளவற்ற மகிழ்ச்சி யடைந்திருக்கிறார்கள். ஏழாம் ஜெப்புலின் என்கிற ஆகாயக் கப்பலில் 13 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு கவுண்ட் ஜெப்பலின் கப்பலை நடத்தினார். அக்கப்பல் புகை வண்டித் தொடர் போல் ஒன்றோடொன்று தொடுக்கப்பட்டிருந்ததாம். முன் பாகத்தில் கவுண்ட் ஜெப்பலி னிருந்து நடத்தினார். மற்ற இரண்டு பிரிவுகளில் ஜனங்கள் வசதியாயிருந்தார்கள். சிற்றுண்டி பரிமாறும் இடமும் ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. கப்பல் தொடர் வெகு நேர்த்தியா யலங்கரிக்கப் பட்டிருந்தது. ஜனங்கள் கட்டணம் செலுத்தி இடத்துக் கிடம் இனி ஆகாய வழியாய்ப் பிரயாணம் செய்வார்கள்.

---

**The World's Missionary Conference:**—சென்ற மாதத்தில் எடின்பரோவில் கூடின உலக மிஷனெரி ஆலோசனை சங்கக் கூட்டங்களைக் குறித்துச் சில சங்கதிகள் வந்திருக்கின்றன. உலக முழுமையிலுமுள்ள புரோடெஸ்டாண்டு சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் 2000 பேர் வரையில் கூடி வந்திருந்ததாகச் சொல்லப் படுகிறது. இப்படிப் பட்ட சங்கம் கிறிஸ்து மார்க்கம் உற்பத்தியான காலமுதல் இதுவரையில் கூடினதில்லை யென்று அறிவிக்கப் படுகிறோம். உலகின்கண் பிரசித்தி பெற்றவர்களெல்லாரும் இச்சபையில் கூடியிருந்தார்கள். கிறிஸ்து மார்க்கப் பிரதம ஆசாரியராகிய கான்டர்பரி பிஷப் அவர்களே இக் கூட்டங்களை யாரம்பித்தார். நாம் ஏற்கனவே சொல்லி யிருந்த பிரகாரம் கிறிஸ்து மார்க்கப் பிரபல்லியத்துக் கடுத்த எட்டு முக்கிய விஷயங்களின் மேல் ஆலோசனைகள் நடந்தன. அவைகளின் முடிவான தீர்மானங்கள் இன்னும் வரவில்லை. வந்த பின்பு திட்டமாய் தெரிவிப்போம்.

---

**The Royal Declaration:**—இங்கிலண்டின் புதிய இராஜாக்கள் தங்கள் மகுடாபிஷேக காலத்தில் செய்கிற பிரதிக்கினை உரோமான் கிறிஸ்தவர்களுக்கு மனவருத்தமுண்டு பண்ணி வருகிற தென்கிற புகார் சிலகாலமாயிருக்கிறது. இதனால் அந்தப் பிரதிக்கினையைச் சீர்திருத்தஞ் செய்யு முயற்சி சிறிது காலமாயிருந்து இப்போது பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டு வரப் பட்டிருக்கிறது. ஜூன்மீ 28வ பிரதம மந்திரி இனி இராஜப் பிரதிக்கினை இவ்விதமாய் மாற்றப்படுமென்று வெளியிட்டார்: "நான் சட்டப்படிக் கேற்பட்ட புரோடெஸ்டாண்டு சபை அவயவமென்று கடவுள் முன்னிலையில் பய பக்தியா யறிக்கை யிடுகிறேன். அந்தப் படிக்கே சிம்மாசனம் புரோடெஸ்டாண்டு அவயவயங்களால் வகிக்கப்படப் பார்த்து அந்த ஒழுங்குகளின்படி நடந்து கொள்ளுவேன்". இதை பெரும்பாலர் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதா முதல் முறை வாசிக்கப் பட்டிருக்கிறது. இது கத்தோலிக்கருக்குத் திருப்தியை உண்டாயிருக்கிறது. புரோடெஸ்டாண்டு சபையாருக்கு அவ்வளவு திருப்தியாயில்லை. கண்டன கூட்டங்கள் நடந்தேறி வருகின்றன.

---

**Aviation:**—ஏழாம் செப்பலின் என்கிற ஆகாயக்கப்பல் பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு ஆகாயத்தில் செல்லுவதைப்பற்றி சொல்லி யிருக்கிறோம். இந்தக் கப்பலுக்கு "டச்லான்ட்" என்று மறு பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது. இது ஜூன்மீ 25வ 32 பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு 3 மணி நேரத்தில் 100 மைல் தூரம் பிரயாணஞ் செய்தது. 29வ இதற்கொரு ஆபத்து நேரிட்டதாகக் கூறப்படுகிறது. டிறஸ்ஸில்டார்ட் என்கிற இடத்திலிருந்து 27 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு 4500 அடி உயரம் கிளம்பிப் போகையில் பலமான காற்று அதை மோதிற்று. 10 மணிநேரம் காற்றில் அலசடிப் பட்டு 125மைல் தூரம் கீழ் திசையாய்க் கொண்டுபோகப்பட்டு, கடைசியாக கீழே விழுந்து மரங்களுக் கிடையில் பாதி நொறுங்கிப்போனது. தெய்வாதீனமாய் பிரயாணிகள் மரங்களிலேறிக் காயங்களோடும், தேய்வுகளோடும் பிழைத்தார்கள். காட்டில் விழுந்த ஆகாயக் கலம் இராணுவ வீரரால் காபந்து செய்யப்படுகிறதாம். பிரயாணிகள் சாகாமற் போனது தெய்வச்செயலே. ஆகாய ரதப் பிரயாணத்தின் சுகம் இவ்வளவுதான் போலும்.

---

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப் பத்திரிகை தமிழ் எடிட்டரிடங் கிடைக்கும். ஒரு அணா வேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.